Scanned by CamScanner

கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!

'ச'வில் தொடங்கும் பொருட்கள் இங்கே சிதறியுள்ளன? கண்டுபிடியுங்கள் பார்ப்போம்?



Scanned by CamScanner

ராணி காமிக்ஸ்–127
(மாதம் இருமுறை இதழ்)

அக்டோபர் 1–15
1989

கிட் கார்சன் தோன்றும்



கோட்டைக்குள் குத்து வெட்டு

மெக்சிகோ நகர தீவிரவாதிகள் செவ்விந்தியர் உதவியுடன் பயங்கரமான வெடி குண்டுகளையும், வெடி மருந்துகளையும் கடத்தி, நகரின் ஒதுக்குப்புறத்தில் உள்ள மலைக் கோட்டையில் பதுக்கி வைத்திருந்தார்கள். தீவிரவாதிகளை கைதுசெய்து, கோட்டையை தகர்த்தெறிய கிட்கார்சன் ஒரு சிறிய படையுடன் மலைக்கு வந்தார்.

Scanned by CamScanner

கிட் படையில் இருந்து ஆறு வீரர்களை பொறுக்கி எடுத்துக் கொண்டு படையை திருப்பி அனுப்பி வைத்தார்.
இந்தாருங்கள்! ஆளுக்கொரு வெடிகுண்டை வைத்துக் கொள்ளுங்கள்!
கோட்டையை அழித்து விட்டு வெற்றியோடு திரும்ப வேண்டும்!
ஓ.கே. கிட்!

கிட் தலைமையேற்று அவர்களை அழைத்துச் சென்றார்.
இடையில் செவ்விந்தியர்களின் கிராமத்தைக் கடக்க வேண்டும். ஜாக்கிரதை!

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner





Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner



Scanned by CamScanner



Scanned by CamScanner



Scanned by CamScanner

Scanned by CamScanner

அந்த விலங்கு எது?

கீழே, A முதல் Z வரையிலான 26 எழுத்துக்களில் சிலவற்றைத் தவிர மற்ற எழுத்துக்கள் சிதறிக் கிடக்கின்றன. விடுபட்ட அந்த எழுத்துக்களை ஒன்று சேர்த்தால் எலியின் ஜென்ம விரோதி கிடைக்கும்! அது எது?



தண்ணீர் கிடைக்குமா?

ஓர் இடத்தில் கிணறு வெட்டுவதற்கு முன்பு அந்த இடத்தில் தண்ணீர் கிடைக்குமா, கிடைக்காதா என்பதை பூமியைத் தோண்டாமலேயே கண்டுபிடித்துவிடலாம். இதற்கு ஒரு கருவி இருக்கிறது. 'ஹைட்ரோஸ்கோப்' என்று அதற்குப் பெயர். 100 மீட்டர் ஆழத்தில் தண்ணீர் இருந்தாலும் இந்த கருவி எளிதில் கண்டுபிடித்து விடும்.

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

உங்களால் முடியுமா?

கீழே 12 கட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு கட்டங்கள் ஒரே மாதிரியான உருவ அமைப்பைக் கொண்டவை. அவை எவை? கண்டுபிடியுங்கள் பார்ப்போம்!



Aயும் Hயும் ஒன்று போல் உள்ளது.

சுஜா தோன்றும்

காட்டுராஜா

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

அந்த சத்தத்தைக் கேட்டு ஜூமாவும் வெளியே வந்தான்! அவனை சுஜா மடக்கினான்!
அய்யோ! இது என்ன?
சில வீரர்கள் ஜூமாவை காப்பாற்றப் போனார்கள்!
யாராவது கிட்டவந்தால், உங்கள் தலைவன் உடம்பில் உயிர் தங்காது! எட்டி நில்லுங்கள்!
அழிவற்றவன் என்று சொல்லிக் கொண்டிருந்த ஜூமா தன்னம்பிக்கையை இழந்தான்!
சுஜாவை தடுக்காதீர்கள்! அவன் சொல்லுவதைக் கேளுங்கள்!



Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

மாந்திரீகச் சக்கரம்

பி.டி.சாமி

11

முன்கதை சுருக்கம்:-

அம்மன் சக்தியைப் பற்றி கட்டுரை எழுதுவதற்காக, கேரளாவில் உள்ள குருதி அம்மன் கோவிலுக்கு சென்றான் அபிநயா. கோவில் பூசாரி- ஆனைக் கண்ணன் கொடுத்த விபூதியை வாயில் வாங்கிக்கொண்ட அபிநயா மயக்கத்துக்குப் போனாள். அவளைக் காணாமல் இந்திரகாந்த் தவித்துக் கொண்டிருந்தான்.

புன்னம்புழா மலையடிவாரத்தில் சொற்பமான வீடுகளும், நெரிசல் இல்லாத கடை வீதியும் இருந்தன.

மேடுபள்ளமாய் விரிந்த நீண்ட இடைவெளியில் பங்களா மாடல் வீடுகள் தனித்தனியாக மரங்களுக்கிடையே முளைத்திருந்தன.

சுகுமாரன்தம்பி தனியாக அமைந்திருந்த ஒரு வீட்டினுள் போடப்பட்டிருந்த கனத்த சோபாவினுள் புதைந்து பின்பக்கமாகச் சாய்ந்திருந்தார்.

நீளமான சோபா அது.

பக்கத்தில் இளம் மஞ்சளில் ரோஸ் பூக்கள் போடப்பட்ட ஷிபான் சேலையினுள் நுழைந்து அவருடைய இளம் மனைவி ஓமனா உட்கார்ந்திருந்தாள். நெஞ்சின் கட்டுமானம் வழக்கம் போல் சரியாமல் நிமிர்ந்தே இருந்தது. சரியாக கையாளப்படாமல் வைத்திருக்கும் பித்தளை விளக்கு போன்ற தோற்றம்.

எதிர் சோபாக்களில், திருமதி சந்திரா அம்மேயும், இந்திரகாந்தும் தெரிந்தார்கள்.

அவன் முகத்தில் கவலை ரேகைகள்! சந்தன நிறத்தில் முழுகைச் சட்டையும், காப்பி நிற பாண்டும் உடம்புக்குக் கொடுத்திருந்தான்.

"அப்பா... இப்பொழுது மணி பனிரெண்டு ஆகிறது. மலையிலுள்ள குருதி அம்மனுக்கு உச்சி வேளை பூஜை நடந்துகொண்டிருக்கும். நான் போய் அம்மனைத் தரிசித்திட்டு வருகிறேன்."

"எந்த அம்மனை?" குறும்புக்காரியான ஓமனா சுத்தமான பல்லிடுக்கில் சிரித்தாள்.

அவன் சிறிய தாயார் என்பதற்காகவோ, அப்பா பக்கத்தில் இருக்கிறார் என்பதற்காகவோ வெட்கப்பட்டு ஒதுங்கிக் கொள்ளத் தயாராக இல்லை. அவனையும் மீறிக்கொண்டு பத்திரிகை நிருபர் அபிநயா மீது பிடிப்பு ஏற்பட்டிருந்தது.

அவனுக்கு குருதியம்மன் கோயில் பற்றி ஓரளவு தெரியும். பக்தியின் பேரால் அங்கே ஏதேதோ பித்தலாட்டங்கள் நடைபெறுகின்றன என்பதை

Scanned by CamScanner

பும் அறிவான்.

அபிநயா வருகையின் நோக்கமும் அவனுக்குப் புரியும். கோயிலின் அந்தரங்கங்களைத் தெரிந்துகொள்ள விரும்பினால் நிச்சயமாக ஆபத்தில் சிக்கிக் கொள்வாள்.

அவளைக் காப்பாற்ற வேண்டும்.

ஆனால்...

அது முடியுமா?

இந்தப் பகுதி மக்கள் பக்தி மார்க்கத்தில் ஊறிப் போய் மூடப் பழக்கவழக்கங்களுக்கு ஆளாவார்கள். எது நடந்தாலும் எல்லாம் இறைவன் செயல் என்று சொல்லி திருப்தியடைந்துவிடுவார்கள்.

அவன் முற்போக்கான எண்ணங்கள் கொண்டவன்.

அதேநேரத்தில் தெய்வமே கிடையாது என்று கூறும் நாத்திகனும் அல்ல. முற்போக்கான– புரட்சிகரமான எண்ணங்கள் கொண்ட சீர்திருத்தக்காரன்! எம்மதமும் சம்மதம் என்பது அவனது சித்தாந்தம்.

ஆடு கோழி அறுத்து இறைவனுக்கு பலியிட வேண்டாம். கோயில் கொலைக் களமல்ல என்ற கருத்துக்கள் அவனுக்குப் பொருந்துபவை.

"இந்திரகாந்த்! நான் கேட்டது புரியவில்லை? எந்த அம்மனைத் தரிசிக்கப் போறேன்னு கேட்டேன்."

"இங்கே எத்தனையோ அம்மன்கள் இருக்கலாம். ஆனால், குருதியம்மன்தானே இங்கே பிரசித்தம்."

உடனே சந்திரா அம்மே குறுக்கிட்டாள்– "தம்பிக்குத் திடீர்னு அம்மன் பக்தி வந்துடுத்து. போய்க் கொள்ளட்டும். ஆனால், தம்பி திரும்பி வரும்போது பிரசாதம் கொண்டு வா."

இந்திரகாந்த் எழுந்தான். போக எத்தனித்ததும்...

"மோனே..."

அழைத்தது– இருபது வயது கொண்ட ஓமனாதான்!

நின்றான்! திரும்பிப் பார்த்தான்.

"நீ கோயிலுக்குத்தானே போறே?"

"ஆ...ஆமா."

"நானும் வர்றேன். உன்னோட அப்பாவைக் கூப்பிட்டால் இப்போது வரமாட்டார். பகலில் என்னோடு வரவே பிடிக்காது..."

இந்திரகாந்த் தயங்கினான். சித்தியுடன் வெளியே போனால் மக்கள் ஒரு மாதிரியாகப் பார்ப்பார்கள்.

அதை சுகுமாரன்தம்பி புரிந்துகொள்ளவில்லை.

அவர் பகலில் ஓமனாவை தனியாக அழைத்துக்கொண்டு எங்குமே போனதில்லை. பார்க்கிறவர்கள் தந்தையும் மகளும் என்று நினைத்துவிடுவார்கள்.

சென்ற வாரம் ஓமனாவை மட்டும் அழைத்துக்கொண்டு திருவனந்தபுரத்திலுள்ள பத்மநாப சுவாமி ஆலயத்திற்குப் போயிருந்தபோது அந்த வெட்கக்கேடான நிகழ்ச்சி நடந்தது.

அர்ச்சகர் கணவன்–மனைவி என்ற உறவைப் புரிந்துகொள்ளாமல் அவர்கள் இருவரும் ஜோடியாக நின்றிருந்த போது......

Scanned by CamScanner

"மகள் நாமகரனம் சொல்லுங்கோ. கோத்திரம் என்ன? நட்சத்திரம் என்ன?"

மகள் என்று சொன்னதுமே அவர் முகம் சுருங்கிப் போனார். அசடு வழிந்து நிலைமையைச் சமாளித்தார். "மகள் இல்லா... என்னோட மனைவி."

சொன்னதும் அர்ச்சகருக்கு தர்மச்சங்கடமாகிப் போய்விட்டது. "ஓ... அங்கனயா... சின்ன வயசுப் பெண்ணாக இருக்கிறதினால அப்படி நினைச்சிட்டேன். தப்பாக எடுத்துக்காதீங்கோ..."

அன்று முதல் பகல் நேரத்தில் ஓமனாவை அழைத்துக் கொண்டு தனியாக எங்கும் போகக் கூடாது என்று தீர்மானித்திருந்தார். அதனால் இரண்டு பேர்களுக்குமே தர்ம சங்கடம்.

"இந்திரகாந்த்! சித்தியும் வர்றேன்னு சொல்றாளில்லே. அவளையும் அழைச்சிட்டுப் போ. எனக்கு ஓய்வு எடுக்கணும் போல இருக்கு."

சுகுமாரன்தம்பியின் பெயர் என்னவோ போல் இருந்தபோதிலும் நாஞ்சில் நாட்டின் தலை நகரான நாகர்கோவில்காரர். பின்னாளில் களியக்காவிளையில் சிறிது காலம் வசித்துவிட்டு கேரள மாநிலத்தில் ஏகப்பட்ட சொத்துக்கள் வாங்கி பாரசாலாவைக் கடந்து வந்து பத்தன்கோடு கிராமத்தில் நிரந்தரமாகவே தங்கிவிட்டவர்.

இந்திரகாந்த் நகம் கடித்துக் கொண்டு யோசித்தான். ஓமனா தாய் இருக்க வேண்டிய இடத்தில்தானே இருக்கிறாள். அழைத்துச் செல்வது தப்பு அல்ல.

"சரி அப்பா."

ஓமனா முகம் குதூகலமடைந்து தாமரை பூவாக மலர்ந்தது.

அடுத்த சில நிமிடங்களில்–

இந்திரகாந்த் ஜீப்பை செலுத்த, அவன் பக்கத்தில் ஓமனா அமர்ந்திருக்க, செம்மண் சாலையில் புழுதியைக் கிளப்பியவாறு விரைந்து கொண்டிருந்தது.

"இந்திரகாந்த்..."

"ம்..."

"உனக்கு எதனால் திடீர்னு அம்மன் பக்தி! இப்படி நீ பக்தனாக மாறி எவ்வளவு காலம் ஆகுது? கோயில் என்றாலேயே வெறுப்பவன் ஆயிற்றே நீ..."

அவன் ஸ்டீயரிங்கைக் கையாண்டபடியே பின்னுக்கு ஓடி வரும் சாலையோரத்து மரங்களையும் நீண்ட இடைவெளி விட்டு முளைத்திருக்கும் கடைகளையும் வீடுகளையும் பார்த்துக்கொண்டே பேசினான். "உண்மைதான் சித்தி. ஆனால், நான் கோயிலையே வெறுப்பவன் அல்ல. சில கோயில்களில் நடக்கும் தப்பான காரியங்கள் தான் என்னை வெறுப்புக்குரியவனாக மாற்றியிருக்கின்றன."

"இப்போது அந்த வெறுப்பு போய்விட்டதா?"

"அது அந்தந்த கோயில்களைப் பொறுத்த விஷயம்."

"உனக்கு குருதியம்மன் கோயில் பிடிக்குமா?"

"பூசாரிகள் பித்தலாட்டக்காரர்களாக இருக்கும் வரையில் எனக்கு எந்த அம்மனையுமே



Scanned by CamScanner

பிடிக்காது."

"உனக்குப் பிடித்தமான அம்மன் பேர் சொல்லட்டுமா?"

அவளிடம் இலேசான பூஞ்சிரிப்பு! குரலிலும் நாணம்!

பார்த்தான்.

"அபிநயாதானே அந்த அம்மன்?"

இந்திரகாந்த் அதிர்ந்தான். சித்தி ஓமனா தன்னுடைய மன நிலையை மிகவும் சுலபத்தில் தெரிந்து வைத்துக்கொண்டு... எதுவுமே அறியாத அப்பாவி போல் நடந்துகொண்டு இருந்திருக்கிறாள்.

இனி சித்தியிடம் மறைப்பது புத்திசாலித்தனம் ஆகாது. சித்தியுடன் மனம் விட்டுப் பேசினால் அவளுடைய உதவி கிடைக்கக்கூடும்.

"சித்தி... அபிநயா துருதுருப்பான பெண். குருதியம்மன் கோயில் பற்றிய சரியான கணிப்பு இல்லாமல் இங்கே வந்துவிட்டாள். அவளோட உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என்று எனக்குச் சந்தேகம்."

ஓமனா பயந்துவிட்டாள்.

"ஏன் சித்தி, பயப்படுறீங்க?"

"அம்மன்களுக்குக் கோபம் வந்துவிட்டால் நாசகாரியங்கள் நடைபெறும். எத்தனை பேர்கள் செத்துப் போயிருக்கிறாங்க..."

"அம்மன்களுக்குக் கோபம் வந்தால்தானே! வராதபடி நான் நடந்துக்கிறேன்."

அவன் ஜீப்பை ஓர் ஆலயத்தின் அடியில் கொண்டுபோய் நிறுத்தினான்.

அருகிலேயே சில பூக்கடைகள்...

இன்னும் வெவ்வேறுவிதமான கடைகள்.

மக்கள் சந்தடி இருந்தது.

இரண்டு பேர்களும் ஜீப்பிலிருந்து குதித்து இறங்கினார்கள். அவள் உடைகள் அடங்கிய பையைக் கையில் எடுத்துக்கொண்டாள்.

மேலாடையின்றி மஞ்சள் சேலையுடன்தான் குருதியம்மன் சந்நிதானத்தினுள் நுழைய வேண்டும் என்பதும், மண்டபத்தினுள்ளே இருக்கும் தடுப்பினுள் உடை மாற்றிக்கொள்ளும் வசதி உண்டு என்பதும் அவளுக்குத் தெரியும்.

பூக்கடைக்காரர்கள் போட்டி போட்டுக்கொண்டு கூப்பிட...

இரண்டு பேர்களும் சென்று அரளிப்பூக்களும் இணைத்துக் கட்டப்பட்டிருந்த பெரிய ரோஜாப்பூ மாலையும் வாங்கினார்கள்.

தேங்காய், பழம், பூ, கற்பூரத் தட்டுடன் வந்த மூதாட்டி ஒருத்தி அவர்களுக்கு ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்று வாழ்த்திக் கொடுத்தாள்.

இந்திரகாந்த் சங்கடமாக நெளிந்தான். "என் மனைவி அல்லு, சித்தி..."

அதேசமயம்...

அந்த இரண்டு பேர்களையும் ஒரு ஜோடிக் கண்கள் மூர்க்கத்தனமாகப் பார்த்துக்கொண்டிருந்தன.

(தொடரும்)

கீழே உள்ள படத்தை 5 நிமிடம் நன்றாக உற்றுப் பாருங்கள். பார்த்துவிட்டீர்களா?

புத்தகத்தை மூடிவிட்டு ஒரு வெள்ளை காகிதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். படத்தில் என்ன பார்த்தீர்கள் என்பதை சரியாக எழுதுங்கள். உங்களுக்கு எவ்வளவு நினைவு ஆற்றல் இருக்கிறது என்பதை கீழே உள்ள மதிப்பெண்ணை பார்த்து நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

20-ம் சரி என்றால், உங்களுக்கு அபார ஆற்றல்.
15–19 வரை என்றால் வெரிகுட். 10–14 என்றால் பரவாயில்லை.
0–4 சுத்த மோசம்.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)
Regd. No. TN/MS(N)/461

ராணி காமிக்ஸ்

அடுத்த காமிக்ஸ்

அதிரடி மன்னன்
சுனில்
தோன்றும்

நான் யார்?

பயங்கர காட்டில் சிக்கித் தவிக்கும்
ஓர் இராணுவ தளபதியின் கதை!

அக்டோபர் 16-ந் தேதி வெளிவருகிறது.
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

Scanned by CamScanner